## அபன்கங்க கோரளை பிரதேச சபை

## மாத்தளை மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

--------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 21 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 08 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆகஸ்ட் 27 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

------------------

தலைவருக்கு அனுப்பப்பட்ட இவ்வறிக்கையின் 1.3 **ஆம் பந்தியிலயில்** குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அபன்கங்க கோரளை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------

1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

----------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு கொள்கைகள்

------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 99 ரெபயாரின் சொகட்களுக்கான இருப்பு மீதியின் பெறுமதி கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெற வேண்டிய கணக்குகள்

-----------------------------------------

மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 03 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 5,348,460 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் வருடங்கள் 1 – 5 இடைப்பட்ட காலத்தை சேர்ந்த ரூபா 3,541,974 இற்கான மீதியும் அடங்கியிருந்தது.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------

மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன் கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,193,721 ஆகக் காணப்பட்டதுடன், அம் மீதிகளில் 02 வருடம் 05 வருடம் இடைப்பட்ட காலத்தை உடைய ரூபா 175,952 இற்கான மீதியும் அடங்கியிருந்தது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 15,867,029 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் சுற்றுநிருப ஏற்பாடுகளுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | |
| (i) பிரிவு 19 (i)(i) | உள்ளூராட்சி ஆணையாரின் அங்கீகாரத்தை முன்னரே பெற்றுக்கொள்ளமால் இரண்டு ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தி அவர்களுக்கு சம்பளம் மற்றும் படியாக ரூபா 99,184 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) பிரிவு 132 (ஏ) | அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் 03 சந்தர்ப்பங்களில் ரூபா 61,650 செலவொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

2 நிதி மீளாய்வு

--------------------

2.1 நிதி விளைவுகள்

------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 761,497 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 722,572 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 1,484,069 இற்கான வீழ்ச்சி ஒன்றினை காட்டுகின்றது.

2.2 வருமான நிருவாகம்

----------------------------

2.2.1 ஏக்கர் வரி மற்றும் நீர் கட்டணம்

-------------------------------------------------

நிலுவை ஏக்கர்வரி மற்றும் நீர் கட்டணம் முறையே ரூபா 52,472 மற்றும் ரூபா 170,570 ஆகும்.

2.2.2 வாடகை

------------

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 19(xii) இன் பிரகாரம் குறிப்பிட்ட அமைச்சரின் அங்கீகாரத்தை பெறாமல் குருபெபில 02 கடைகள் மற்றும் புஸ்ஸெல்ல 01 கடைகள் என்பன 05 வருடங்களுக்காக வாடகைக்கு கொடுத்திருந்தது. குருபெபில நிர்மாணிக்கப்பட்டு 05 வருடங்கள் கழிந்துள்ள போதும் அத்திகதி முதல் மீளாய்வாண்டு இறுதிவரை கடை ஒன்று வாடகைக்கு கொடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

--------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 305,552 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 423,154 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது

3 செயற்பாட்டு மீளாய்வு

------------------------------

3.1 செயற்பாட்டு திறமையின்மை

------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் பிரிவு 21 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வரைபுகளின் கீழ் நிர்மாணிக்கப்படும் கட்டடங்கள் தொடர்பாக

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய மூன்று வருடங்களில் கிடைத்திருந்த 68 கட்டட விண்ணப்பங்களில் 42 அங்கீகரிக்கப்பட்டிருந்தன எனினும் இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது 02 விண்ணப்பங்களுக்கு மாத்திரமே.

(ஆ) உள்ளுராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு இடையூறு இன்றி பங்களிப்புத் தொகை அனுப்பாமையினால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்புத் தொகைகளின் கூட்டுத்தொகை ரூபா 819,896 ஆகும்.

(இ) சபைக் கட்டடம் மற்றும் இணைவுள்ள நிர்மாண வேலைகளுக்காக ரூபா 4,962,026 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், அந்த நிலப் பகுதியை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 06 வருட காலம் கடந்துள்ள ரூபா 188,710 இற்கான முற்கொடுப்பனவு மீதியினை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

-----------------------------------------------

சபைக்குச் சொந்தமான ஒரு கை டிரக்டர், இரண்டு மோட்டார் சைக்கில்கள் ஒரு டிபர் வண்டி என்பன பயன்படுத்தப்படாமல் சபை வளவில் நிறுத்தப்பட்டுள்ளன.

3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

------------------------------------------

சபைக்குச் சொந்தமான கடை ஒன்று தொடர்பாக முன்னைய காலப்பகுதிகளுக்காக குறிப்பிட்டுள்ளவாறு வாடகை அறவிடப்படாமையால் சபைக்கு ரூபா 17,000 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

3.4 ஒப்பந்த நிருவாகம்

--------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | நிர்மாண வேலைகளின் பெயர் | மதிப்பீட்டு ஏற்பாடுகளின் மூலம் | பரிசோதனை மேற்கொள்ளப் பட்ட திகதி | அவதானிப்புகள் |
|---|---|---|---|---|
| (i) | கும்பலஒழுவ கொழுபுவத்த அஸ்வெத்தும பகுதியில் குறுகிய பாலம் நிர்மாணித்தல் | ரூபா 293,912 மாகாண குறிப்பிட்ட அபிவிருத்தி மானியம் | 2014 மார்ச் 13 | (i) பாலத்தில் பாராங்கல் சுவர்களாக கனமீற்றர் 10.08 ஆக ரூபா 88,355 செலவிடப்பட்டுள்ளது. கற்கள் நியமங்களுக்கு ஏற்றவையாக காணப்படவில்லை.<br>(ii) 8.5 சதுர மீற்றர் சீமெந்து மண் கலவையில் சாந்து பூசி வேலை விடயத்தை பூர்த்தி செய்திருக்கவில்லை.<br>(iii) சுவரின் பக்கத்தில் நிரப்புவதற்காக மண் வெட்டுதல் மற்றும் போக்குவரத்திற்காக ரூபா 15,324 தொகை செலுத்தி இருந்த போதிலும், அவ் வேலை விடயம் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | எலகல 08 ஏக்கர் பாதையை புனர்நிர்மாணம் செய்தல் | ரூபா 291,227 மாகாண குறிப்பிட்ட அபிவிருத்தி மானியம் | மேற்படி | (i) கொங்கிரீட் கலவை 4'' கனத்தில் போடப்பட வேண்டும் எனினும் பாதையில் இரண்டு இடங்களை உடைத்து பரிசோதித்த போது அங்கு சுமாரான உயரம் 2.875 அங்குலமாக இருப்பது அவதானிக்கப்பட்டது.<br>(ii) பாதையின் நீளம் 82 மீற்றர்கள் அகலம் 2.5 மீற்றர் ஆக காணப்பட்டது. கனம் 0.073 ஆகக் காணப்பட்டமையால் மொத்தம் 5.55 கன மீற்றர்களுக்காக ரூபா 68,175 தொகையொன்று மிகையாச் செலுத்தப்பட்டிருந்தது. |

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

---

4.1 பாதீட்டு கட்டுப்பாடு

---

9 வருமான விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 152,000 இற்கான வருமானத்தில் பணம் ஏதும் உழைத்திருக்கவில்லை. அத்துடன் 15 வருமான விடயங்களில் மதிப்பீட்டு வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானம் இடையே நூற்றிற்கு 27 நூற்றிற்கு 95 இடையே வீச்சில் முரண்கள் காணப்பட்டது. 22 செலவு விடயங்களில் தேறிய ஏற்பாடுகள் மற்றும் செலவுகளிடையே நூற்றிற்கு 19 முதல் நூற்றிற்கு 96 வரை வீச்சில் முரண்கள் காணப்பட்டதுடன், 04 செலவு விடயங்களில் மதிப்பீடுகளில் மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் வருமானங்கள் மற்றும் செலவுகள் கட்டுப்பாட்டில் பாதீடு பயன்தரு முகாமைத்துவ கட்டுபாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

4.2 தீர்க்கப்படாதிருந்த மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

---

சபைக்கு சமர்பித்திருந்த கணக்காய்வு ஐயவினாக்களில் 11 இற்கு பதில் அனுப்பியிருக்கவில்லை. அத்துடன் அவ் ஐயவினாக்களும் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 17,868,587 ஆகும்..

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலுவை வருமான அறவீடு செய்தல்
(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு
(இ) அகக் கட்டுபாடு
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஊ) நிதிக் கட்டுப்பாடு